# மழை! மழை! மழை!





மழை ! மழை ! மழை நின்தன் கருணை ,

மழை என் மீது பொழிய வேண்டுகிறேன் - கண்ணா !

மழை ! மழை....

அழைத்ததும் நீ ஓடோடி வந்து அன்று ,

வேழமதைக் காத்திட்ட நின் கருணை ;

மழை இந்த அடியவன் மீதும் இன்று ,

வீழ வேண்டி நிற்கின்றேன் கண்ணா !

மழை ! மழை .......

விழையாமலே மனம் அறிந்து அன்று ,

தோழனுக்கு காட்டிய நின்தன் பரிவு ;

தழைத்திட இந்த அடியவனும் இன்று ,

வாழ வழிதனைகாட்டுவாய் கண்ணா !

மழை! மழை......